பிரசார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை - 4

05 09 2026 SATURDAY - 6 45 AM

வணக்கம் - மாநில செய்திகள்

தலைப்புச் செய்திகள்

1. குடியரசு துணைத்தலைவர் திரு. சி.பி. ராதாகிருஷ்ணன், சென்னையில் இன்று பல்வேறு நிகழ்ச்சிகளில் கலந்து கொள்கிறார்.

2. வரும் ஆண்டுகளில் விளையாட்டுகளுக்கான முக்கிய மையமாக இந்தியா உருவெடுக்கும் என்று மத்திய உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா கூறியுள்ளார்.

3. மானிய விலை வெங்காய விற்பனை, கிராமப்புறங்களுக்கும் விரிவுபடுத்தப்படும் என்று மாநில உணவு அமைச்சர் திரு. வெங்கடரமணன் தெரிவித்துள்ளார்.

4. த.வெ.க. தலைமையிலான கூட்டணியில் தங்களது கட்சி இடம்பெறவில்லை என்று இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச் செயலாளர் திரு. வீரபாண்டியன் கூறியுள்ளார்.

5. ஆசிய கோப்பை மகளிர் கிரிக்கெட் போட்டியில் இந்தியா இன்று பாகிஸ்தானை எதிர்கொள்கிறது.

>>>>>>><<<<<

குடியரசு துணைத்தலைவர் திரு. சி.பி. ராதாகிருஷ்ணன், சென்னையில் இன்று பல்வேறு நிகழ்ச்சிகளில் கலந்து கொள்கிறார்.

தேசிய அளவிலான இதய அறுவை சிகிச்சை நிபுணர்களின் கருத்தரங்கில் அவர் உரையாற்றவுள்ளார்.

இந்திய இதயவால்வு பதிவேட்டு அமைப்பையும் அவர் தொடங்கி வைக்கவுள்ளார்.

இன்று மாலை நடைபெறும் சிறப்பு தபால்தலை வெளியீட்டு நிகழ்ச்சியிலும் திரு. சி.பி. ராதாகிருஷ்ணன் பங்கேற்கிறார்.

>>>>>>><<<<<

வரும் ஆண்டுகளில் விளையாட்டுகளுக்கான முக்கிய மையமாக இந்தியா உருவெடுக்கும் என்று மத்திய உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா கூறியுள்ளார்.

அஹமதாபாதில் நேற்று நிகழ்ச்சி ஒன்றில் பேசிய அவர், விளையாட்டு உபகரணங்களை தயாரிப்பதில் இந்தியா முக்கிய மையமாக மாறும் என்று நம்பிக்கை தெரிவித்தார்.

சர்வதேச போட்டிகளில் அதிக பதக்கங்களை வெல்வது மட்டுமல்லாமல், ஒலிம்பிக், ஆசிய விளையாட்டு மற்றும் காமன்வெல்த் விளையாட்டு போட்டிகளில் இடம்பெறும் அனைத்து விளையாட்டுகளுக்கான வசதிகளை நாட்டில் உருவாக்குவதே அரசின் இலக்கு என்றும் அவர் கூறினார்.

சர்வதேச போட்டிகளை நடத்தும் அளவிற்கு இந்தியா நகரங்கள் கட்டமைப்பு வசதிகளை கொண்டுள்ளதாகவும் திரு. அமித் ஷா தெரிவித்தார்.

>>>>>>><<<<<<

ஆசிரியர் தினம் இன்று கொண்டாடப்படுகிறது.

நாட்டின் குடியரசுத் தலைவராக இருந்த டாக்டர் ராதாகிருஷ்ணனின் பிறந்த நாள், ஒவ்வோராண்டும் ஆசிரியர் தினமாக கொண்டாடப்படுகிறது.

இந்நாளில் தன்னலமற்ற தியாக மனப்பான்மை கொண்ட சிறந்த மாணவர்களை உருவாக்கும் ஆசிரியர்களுக்கு மத்திய – மாநில அரசுகள் விருதுகளை வழங்கி கௌரவிக்கின்றன.

புதுதில்லியில் நடைபெறவுள்ள விழாவில் தேசிய நல்லாசிரியர் விருதுகளை குடியரசுத்தலைவர் திருமதி. திரௌபதி முர்மு வழங்கவுள்ளார்.

தமிழகத்திலிருந்து இந்த ஆண்டு தேசிய நல்லாசிரியர் விருதுக்கு, தென்காசி மாவட்டம், புளியம்பட்டி ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளி ஆசிரியர் திரு. தங்கராஜ், மதுரை திருப்பரங்குன்றம் கேந்திரிய வித்யாலயா பள்ளி தலைமை ஆசிரியை திருமதி. அமுதா ஆகியோர் தேர்வு செய்யப்பட்டுள்ளனர்.

மாநில அரசின் சார்பில் இந்த ஆண்டு 386 ஆசிரியர்களுக்கு நல்லாசிரியர் விருது அறிவிக்கப்பட்டுள்ளது.

ஆசிரியர் தினத்தை முன்னிட்டு, குடியரசுத்தலைவர் திருமதி. திரௌபதி முர்மு, ஆசிரியர்களுக்கு வாழ்த்து தெரிவித்துள்ளார்.

ஆசிரியர்கள் தங்கள் வழிகாட்டுதல்கள், அறிவுரைகள் மூலம் மாணவர்களின் திறமைகளை வளர்ப்பதிலும், அவர்களின் குணநலன்களை வலுப்படுத்துவதிலும் முக்கியப் பங்கு வகிப்பதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

மாணவர்களை நல்ல மனிதர்களாக உருவாக்குவது ஆசிரியர்களின் கடமை என்றும், ஆசிரியர்களும் தங்களது அறிவை புதுப்பித்துக் கொண்டு, புதுமையான

கற்பித்தல் முறைகளை கையாள வேண்டும் என்றும் திருமதி. திரௌபதி முர்மு கேட்டுக் கொண்டுள்ளார்.

>>>>>>><<<<<<

த.வெ.க. அரசின் மூத்த அமைச்சர்கள் திரு. ஆனந்த், திரு. ஆதவ் அர்ஜுனா, திரு. நிர்மல்குமார், திரு. ராஜ்மோகன் ஆகியோர் நேற்று சென்னையில் இடதுசாரி கட்சித் தலைவர்களை சந்தித்து பேசினர்.

மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச் செயலாளர் திரு. சண்முகம், இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச் செயலாளர் திரு. வீரபாண்டியன் ஆகியோரை சந்தித்து பேசிய பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய அமைச்சர் திரு. நிர்மல்குமார், தூய்மைப் பணியாளர்களின் போராட்டத்தை மாநில அரசு முடிவுக்கு கொண்டு வந்துள்ளதாக கூறினார்.

டாஸ்மாக் ஊழியர்களின் கோரிக்கையை ஏற்று ஊதிய உயர்வு அறிவிக்கப்பட்டுள்ளது என்றும் அவர் தெரிவித்தார்.

இடதுசாரி கட்சிகளுக்கு எதிரான குஜிலியம்பாறை வட்டாட்சியரின் நடவடிக்கை மற்றும் தலைமைச்செயலாளரின் சுற்றறிக்கை குறித்து வருத்தம் தெரிவித்துள்ளதாகவும், இதுபோன்ற சம்பவங்கள் இனி நடைபெறாது என்று உறுதியளித்துள்ளதாகவும் அமைச்சர் கூறினார்.

மதிமுக பொதுச்செயலாளர் திரு. வைகோவையும், அமைச்சர்கள் சந்தித்து பேசினர்.

>>>>>>><<<<<<

த.வெ.க. தலைமையிலான கூட்டணியில் தங்களது கட்சி இடம்பெறவில்லை என்று இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச் செயலாளர் திரு. வீரபாண்டியன் தெரிவித்துள்ளார்.

நேற்று செய்தியாளர்களிடம் பேசிய அவர், வரும் 9ஆம் தேதி த.வெ.க. ஆதரவு கட்சிகளின் கூட்டம், சென்னையில் நடைபெறவுள்ளதாகவும், அதில் பங்கேற்குமாறு மூத்த அமைச்சர்கள் அழைப்பு விடுத்ததாகவும் கூறினார்.

இதுகுறித்த எந்த முடிவையும் தங்களது கட்சி எடுக்கவில்லை என்றும், கூட்டணியில் இடம்பெறுவதில்லை என்பதில் தங்களது கட்சி உறுதியுடன் இருப்பதாகவும் திரு. வீரபாண்டியன் தெரிவித்தார்.

>>>>>>><<<<<<

கூட்டுறவு அங்காடிகளில் மானிய விலையிலான வெங்காய விற்பனை, நாளை மறுநாள் முதல் கிராமப்புறங்களுக்கும் விரிவுபடுத்தப்படும் என்று மாநில உணவு அமைச்சர் திரு. வெங்கடரமணன் தெரிவித்துள்ளார்.

வேலூர் மாவட்டம், அரியூர் பகுதியில் நேற்று நிகழ்ச்சி ஒன்றில் கலந்து கொண்ட பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய அவர், எட்டாயிரத்து 419 நகர்ப்புற கூட்டுறவு அங்காடிகளில் தற்போது ஒரு கிலோ வெங்காயம் 35 ரூபாய்க்கு விற்பனை செய்யப்பட்டு வருவதாக கூறினார்.

இதன்மூலம், 80 லட்சம் குடும்ப அட்டைதாரர்கள் பயனடைந்துள்ளதாகவும், இன்று கூடுதலாக வெங்காயம் விற்பனைக்கு வந்து சேரும் என்றும், அதன்பின்னர் இந்த திட்டம் ஊரகப் பகுதிகளுக்கு விரிவுபடுத்தப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

அடுத்த மாதம் முதல் நியாயவிலைக் கடைகளில் கோதுமை மாவு பாக்கெட்டுகளில் அடைத்து விற்பனை செய்யப்படவுள்ளதாகவும், படிப்படியாக மற்ற அத்தியாவசிய பொருட்களும் பாக்கெட்டுகளில் அடைத்து விற்பனை செய்ய முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் திரு. வெங்கடரமணன் கூறினார்.

>>>>>>><<<<<<

சென்னை மேற்கு மாம்பலத்தில் உள்ள மிகவும் பழமையான ஆதிசென்ன கேசவ பெருமாள் கோவிலைச் சுற்றியுள்ள ஆக்கிரமிப்புகளை உடனடியாக அகற்ற வேண்டும் என்று இந்துசமய அறநிலையத்துறைக்கு சென்னை உயர்நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

இதுகுறித்த வழக்கு நேற்று விசாரணைக்கு வந்த போது, ஆக்கிரமிப்புகளை அகற்ற ஏற்கனவே பிறப்பித்த உத்தரவு அமலாக்கப்படவில்லை என்று நீதிபதிகள் தெரிவித்தனர்.

ஆக்கிரமிப்பாளர்களிடம் அறநிலையத்துறை வாடகை பாக்கியை பெற்றுக் கொண்டு, அவர்களை மீண்டும் வாடகைதாரர்களாக ஆக்குவது நீதிமன்ற உத்தரவுக்கு முரணானது என்றும் நீதிபதிகள் சுட்டிக்காட்டினர்.

>>>>>>><<<<<<

முதுபெரும் இசைக் கலைஞர் எஸ். ஆர். ஜானகிராமன் உடல்நலக்குறைவு காரணமாக சென்னையில் நேற்று காலமானார். அவருக்கு வயது 98.

இசையமைப்பாளர், எழுத்தாளர், இசை ஆய்வாளர் என பன்முக திறமையுடன் விளங்கிய அவர், சென்னை அகில இந்திய வானொலியின் முதல் நிலை கலைஞராகவும் பணியாற்றியுள்ளார்.

அவரது இசைத்திறமையை பாராட்டி அவருக்கு, மத்திய அரசு பத்மஸ்ரீ விருதை வழங்கியது.

>>>>>>><<<<<<

வளிமண்டல சுழற்சி காரணமாக, மேற்குத்தொடர்ச்சி மலை மாவட்டங்கள் மற்றும் மதுரை, சிவகங்கை, ராமநாதபுரம், விருதுநகர் ஆகிய மாவட்டங்களில் இன்று

ஓரிரு இடங்களில் இடிமின்னல் மற்றும் பலத்த காற்றுடன் கூடிய லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும் என்று வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

மாநிலத்தின் பிற பகுதிகளில் ஓரிரு இடங்களிலும், புதுச்சேரி மற்றும் காரைக்கால் பகுதியிலும், இடி மின்னலுடன் கூடிய லேசான மழை பெய்யக்கூடும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

>>>>>>><<<<<<

இருவரிச் செய்திகள்

ஈரானுக்கு நிதியுதவி செய்ததாக கூறி, துருக்கியைச் சேர்ந்த வங்கி ஒன்றின் மீது அமெரிக்கா பொருளாதார தடை விதித்துள்ளது.

>>>>>>><<<<<<

இயற்கை சீற்றத்தால் பாதிக்கப்பட்டுள்ள நேபாளத்திற்கு அமெரிக்க உதவ வேண்டும் என்று அந்நாட்டு நாடாளுமன்ற உறுப்பினர்கள் வலியுறுத்தியுள்ளனர்.

>>>>>>><<<<<<

நாடுமுழுவதும் பகவான் ஸ்ரீ கிருஷ்ணர் ஆலயங்களில் கோகுலாஷ்டமி நேற்று வெகுவிமரிசையாக கொண்டாடப்பட்டது.

>>>>>>><<<<<<

எந்தவொரு நிலைமையையும் சமாளிக்கும் வகையில் இந்திய விமானப்படை நேற்று Yelahanka-வில் உள்ள விமானப்படை தளத்தில் Dornier விமானங்களின் அணிவகுப்பை நடத்தியது.

>>>>>>><<<<<<

நாமக்கல் மாவட்டத்தில் கால்நடை மருத்துவ வசதி கிடைக்காத கிராமங்களில் நடைபெறவுள்ள கால்நடை சுகாதார மற்றும் விழிப்புணர்வு சிறப்பு முகாம்களை பயன்படுத்திக் கொள்ளுமாறு விவசாயிகளை மாவட்ட நிர்வாகம் கேட்டுக் கொண்டுள்ளது.

>>>>>>><<<<<<

திண்டுக்கல்லில் அதிநவீன ஆதார் சேவை மையம் நேற்று முதல் செயல்பாட்டுக்கு வந்துள்ளது.

>>>>>>><<<<<<

கன்னியாகுமரி மாவட்டம், கோதையாற்றில் தென்பட்ட முதலையை பிடிக்கும் முயற்சியில் வனத்துறையினர் தொடர்ந்து ஈடுபட்டுள்ளனர்.

>>>>>>><<<<<<

தருமபுரி மாவட்டம், பாலக்கோடு வனப்பகுதியில் கடந்த ஆறு ஆண்டுகளில் கைப்பற்றப்பட்ட நாட்டு வெடிகுண்டுகளை நேற்று வனத்துறையினர் பாதுகாப்பாக செயலிழக்கச் செய்தனர்.

>>>>>>><<<<<<

தூத்துக்குடி மாநகராட்சியில் உள்ள சாலையோர வியாபாரிகளுக்கான பிரதமரின் சுழல்நிதி திட்டத்தின்கீழ் கடனுதவி பெறுவதற்கான சிறப்பு முகாம் வரும் 9ஆம் தேதி முதல் 3 நாட்கள் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

>>>>>>><<<<<<

திருநெல்வேலி மாவட்டம் அருகன்குளத்தில் 58 வகையான இனிப்புகளை, 10 ஆயிரத்து எட்டு பானைகளில் படைத்து, ஸ்ரீ கிருஷ்ணருக்கு சிறப்பு பூஜைகள் நடைபெற்றன.

>>>>>>><<<<<<

விளையாட்டுச் செய்திகள்

ஆசிய கோப்பை மகளிர் கிரிக்கெட் போட்டியில் இந்தியா இன்று பாகிஸ்தானை எதிர்கொள்கிறது.

இப்போட்டி துபாயில் இன்றிரவு 8 மணிக்கு தொடங்குகிறது.

>>>>>>><<<<<<

உலக பாரா வில்வித்தைப் போட்டி குஜராத் மாநிலம், அஹமதாபாதில் நேற்று தொடங்கியது.

வரும் 9ஆம் தேதிவரை நடைபெறவுள்ள இந்தப் போட்டியில், 19 நாடுகளிலிருந்து 105 வீரர் வீராங்கனைகள் பங்கேற்கின்றனர்.

>>>>>>>END<<<<<<